பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: ஐப்பசி 8 (25—10—71) திங்கள் வெளியூர்: ஐப்பசி 9 (26—10—71) செவ்வாய் [இதழ்: 109

ஏழைகட்கு இலவச மனைக்கட்டு

புதுடில்லி, அக். 25—
நிலமில்லாத கிராமவாசிகளுக்கு இலவச மனைக் கட்டுகள் வழங்கும் புதிய திட்டம் ஒன்றை மத்திய அரசு அறிவித்திருக்கிறது; இதற்காகும் செலவு முழுவதையும் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும்.

இப்படி ஒதுக்கப்படுவதற்குத் தகுதியான இடங்களை ஆய்ந்தெடுக்கும்படி மாநில அரசுகள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

வெளி நாட்டுத் தலைவர்களுடன் இந்திரா முக்கியப் பேச்சு

பாகிஸ்தான் அதிபர் கலக்கம்

நாட்டை விட்டுப் புறப்படுமுன் எதிர்க் கட்சித் தலைவர்களுடன் தலைமையமைச்சர் சந்திப்பு

புதுடில்லி, அக். 25—
மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் 3 வாரம் சுற்றுப்பயணம் செய்யும்பொருட்டு தலைமையமைச்சர் இந்திரா காந்தி நேற்று புதுடில்லியிலிருந்து புறப்பட்டார்.

அவர், பெல்ஜியம், ஆஸ்திரியா, பிரிட்டன், அமெரிக்கா, பிரான்சு, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறார்.

டில்லியிலிருந்து புறப்பட்ட அவரது தனி விமானம், வழியில் சிறிது நேரம் லெபனன் தலைநகரான பெய்ரூத்தில் இறங்கியதும் அங்கு அவரை அந்நாட்டுத் தலைமையமைச்சர் சாயப் சலாம் வரவேற்றார். இரு தலைவர்களும் விமான நிலையத்தில் வங்க தேசப் பிரதேசப் பிரச்சினை மற்றும் மேற்கு ஆசிய நிலவரம் குறித்து விவாதித்தனர்.

ஐ. நா. நாளையொட்டி பாகிஸ்தான் அதிபர் யாகியா கான் வெளியிட்ட செய்தியில் 'பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரத்தில் இந்தியா தலையிடுகிறது' என்று கூறியிருப்பது 'அற்பத்தனமாகும்' என்று தலைமையமைச்சர் கருத்தறிவித்தார்.

பெய்ரூட்டிலிருந்து புறப்பட்ட தலைமையமைச்சர் பெல்ஜியம் தலைநகரான பிரஸ்சல்ஸ் போய்ச் சேர்ந்தார்; அங்கு அவருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது; பெல்ஜியம் தலைமையமைச்சரும் உயர்தர அதிகாரிகளும் வந்திருந்து இந்திரா காந்தியை வரவேற்றனர்.

அந்நாட்டுத் தலைவர்களிடம் முக்கியப் பேச்சுவார்த்தை நடத்துவதுடன், மன்னரையும் இந்திரா சந்திக்கிறார்.

பாகிஸ்தான் அச்சம்

தலைமையமைச்சரின் வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தில், பாகிஸ்தான் மிகவும் அச்சம் கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

வங்க தேசப் பிரச்சினையையும், கிழக்கு வங்கத்தில் இனக் கொலை செய்யப்படுவதுபற்றியும் தலைமையமைச்சர் எடுத்துரைக்கக் கூடும் -- என்ற எண்ணமே இந்த அச்சத்துக்குக் காரணமாகும்.

வெளிநாடு புறப்படுமுன், தலைமையமைச்சர் எதிர்க் கட்சித் தலைவர்களான பூபேஷ் குப்தா (வலது கம்யூ.), எஸ். என். மிஸ்ரா (சிண்டிகேட்), கி. மனோகரன் (தி. மு. க.), தயாபாய் பட்டேல் (சுதந்தரா) ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேசினார்.

அவர்களிடம் எல்லை நிலைமையை எடுத்துக் கூறியதுடன், அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறினார்.

துணைக்கண்டத்தில் நெருக்கடி முற்றியிருக்கும் இந்த நேரத்தில் தலைமையமைச்சர் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருப்பது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்று கருதப்படுகிறது.

தலைமையமைச்சர் இங்கில்லாத நேரத்தில் எவ்வித அசம்பாவிதமும் நேரிடாது என்றே அவர் கருதுகிறார்; அப்படி ஏதாவது நிலைமை ஏற்பட்டால் உடனடியாகத் திரும்பும் பொருட்டு தயார் நிலையிலேயே அவர் சென்றிருக்கிறார்.

கறுப்புப்பண வேட்டை

பஸ் முதலாளியிடம் ரூ. 60,000 பிடிபட்டது

சென்னை, அக். 25—
காஞ்சிபுரத்தில் வருமான வரி அதிகாரிகள் சென்ற சனிக்கிழமையன்று பிரபல பஸ் உரிமையாளர் வீட்டிலும் -- அலுவலகத்திலும் சோதனைகளை நடத்தி கணக்கில் காட்டப்படாத பணம் எனக் கூறப்படும் ரூ. 60,000 ரொக்கத்தையும், ரூ. 1.5 இலட்சம் பெறுமானமுள்ள நகைகளையும் கைப்பற்றியதாகத் தகவல் கூறுகின்றன.

சோதனைகளின்போது ஏராளமான கணக்குகளும், பதிவேடுகளும் கைப்பற்றப்பட்டதாகவும், திரைப்பட அரங்குகள் -- கட்டடங்கள் -- ஓட்டல்கள் மற்றும் பிற இனங்களில் ரூ. 12 இலட்சம் வரை முதலீடு செய்யப்பட்டுள்ளதை அவை காட்டுவதாகவும் கூறப்படுகிறது.

தூதரகத்தைக் காலி செய்கிறது பாகிஸ்தான்

புதுடில்லியிலிருந்து வெளியேறக் குறுகிய கால நோட்டீசு!

புதுடில்லி, அக். 25—
புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரிகளையும் -- ஊழியர்களையும் கும்பலாக வெளியேற்ற பாகிஸ்தான் முயற்சித்துவருகிறது.

குறுகியகால நோட்டீசின்மீது பாகிஸ்தானுக்குப் போகத் தயாராக இருக்குமாறு 56 பேருக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறதாம்.

இவ்வாறு குறுகிய கால நோட்டீசு கொடுப்பதனால் ஊழியர்களுக்கு ஏற்படும் வசதிக் குறைவுக்காக வருந்துவதாகவும், தற்போது நிலவும் அசாதாரணமான சூழ்நிலையே இதற்குக் காரணம் என்றும், பாகிஸ்தான் தூதரகம் இந்த மாற்றல் உத்தரவில் கூறியிருக்கிறது.

மூட்டை முடிச்சுகளை எல்லைப் பகுதிக்கு அனுப்பிவைப்பதற்குத் தயாராகக் கட்டிவைத்திருக்குமாறும் இந்த உத்தரவில் கூறப்பட்டிருக்கிறது.

ஊழியர்கள் புறப்படும் நாளன்று இந்த மூட்டை முடிச்சுகளை எல்லைப்புறத்துக்கு அனுப்பி

(5-ம் பத்தி பார்க்க)

ஐ. நா. மூலம் ஏற்பட்ட நற்பயன்

உணராதவன் விளைவே யாகியாகானின் போர் ஆயத்தம்

அமைதியை நிலைநாட்ட அனைவரும் முயல்வீர்-- நாட்டு மக்களுக்கு நாவலர் அன்பழைப்பு

சென்னை, அக். 25—
"ஐ. நா. பேரவையின் கொள்கையை மதிக்காத காரணத்தால்தான் இன்று பாகிஸ்தான் தனது படைகளை இந்திய எல்லையில் குவித்து வருகிறது. இதனால் நாமும் நமது படைகளைத் தயார் படுத்தவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

"எந்த நேரமும் நாம் தயாராக இருக்கவேண்டும் – என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி சொல்லியிருக்கிறார்; நாம் உலக அமைதியைப் பாதுகாக்க முடியாவிட்டாலும் – நமது வீட்டுக்குள்ளாவது அமைதியைக் காப்பாற்ற வேண்டும்; மனித அமைதியைக் காக்க நாம் என்றும் பாடுபட வேண்டும்"

என்று தமிழ்நாடு கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஐ. நா. சபையின் 26-வது ஆண்டு நிறைவு விழாவினையொட்டி நேற்றுக் கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் தலைமை தாங்கி உரையாற்றுகையில் சுட்டிக்காட்டிக் கேட்டுக்கொண்டார்; அவர் மேலும் கூறியதாவது :-

"ஐக்கியநாடுகள் அவை ஆண்டுதோறும் மக்களுக்கு என்னென்ன தொண்டுகளை ஆற்றி வருகிறது என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

"ஐ.நா. அவையின் ஆக்கப் பணிகள் மேலும் பெருகிட வேண்டும் —உலகில் அமைதி நிலவிட வேண்டும் என்ற நோக்கத்தில்தான் உலகமெல்லாம் இந்த விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

ஐ. நா. இல்லாவிட்டால் கடந்த 25 ஆண்டுக்காலத்தில் ஏற்பட்ட நற்பலன்கள் எல்லாம் இல்லாமல் போய் இருக்கும்.

ஐ. நா. பேரவை மனித உரிமையைப் பேணிக்காப்பதுடன் மட்டுமல்லாமல் வசதியுள்ள நாடுகளின் மூலம் வசதியில்லாத நாடுகளுக்குப் பல உதவிகளைச் செய்துவருவதை நாம் எல்லோரும் உணர வேண்டும்; அந்த வகையில் நமது நாடு பெற்ற உதவி ஏராளமாகும்.

இன்றையத்தினம் பல நாடுகள் போர் ஆயுதங்களை பெருக்குவதற்காகப் பெரும் பணத்தைச் செலவிடுகின்றன; அதற்குப் பதிலாக நாம் அந்தப் பணத்தை விவசாயத்திற்கும்--மற்ற துறைகளுக்கும் பயன்படுத்தினால் பல நன்மைகளைப் பெறமுடியும்."

அவசர நிலை ஏற்பட்டால் உடனடியாக நாடு திரும்ப இந்திரா காந்தி முடிவு

புதுடில்லி, அக். 25—
வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்கும் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி, தாம் இல்லாதபோது அமைச்சரவைக் கூட்டங்களுககுத் தலைமைவகிக்குமாறு நிதியமைச்சர் சவானைக் கேட்டுக் கொண்டிருக்கிறாராம்; மற்றும் அரசு நடவடிக்கைகளைக் கவனிக்கும் பொறுப்பும் சவானிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறதாம்; இது, 'தலைமையமைச்சருக்கு அடுத்தபடியாக இருப்பவர் சவான் தான்' என்பதையே காட்டுவதாக அரசியல் நோக்கர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தாம் இல்லாதபோது செயல்பட வேண்டிய முறைகள் பற்றியும் இந்திரா காந்தி கூறிச் சென்றிருக்கிறாராம். இரண்டு நாட்களுக்கு ஒருமுறை அமைச்சரவையின் அரசியல் விவகாரக் குழு, காலை 11-மணிக்குக் கூடவேண்டுமென்று இந்திரா காந்தி தெரிவித்திருக்கிறார்.

அரசுச் செயலர்கள் குழு, நாளும் கூடி, எல்லை நிலைமையை ஆராய்ந்து உடனுக்குடன் அரசியல் விவகாரக் குழுவுக்குத் தகவல் தரவேண்டுமென்றும் இந்திரா தெரிவித்திருக்கிறார்.

ஏதாவது அவசர நிலை ஏற்பட்டால் தமது சுற்றுப் பயணத்தை நிறுத்திவிட்டு உடனடியாக நாடு திரும்புவதாகவும் இந்திரா தமது சக அமைச்சர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

(1-ம் பத்தித் தொடர்ச்சி)

வைக்கப் பாகிஸ்தான் தூதரகம் ஏற்பாடுகள் செய்யும்.

புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் மொத்தம் 130 பேர் முதல் 140 பேர் வேலை செய்வதாக மதிப்பிடப்படுகிறது.

ஒரு சூப்பிரண்டெண்டு--உதவியாளர்கள் --- சுருக்கெழுத்தாளர்கள் ஆகியோர் மாற்றல் உத்தரவு பெற்றவர்களில் உள்ளனர்.

தமிழ்நாடு வீட்டு வசதித் திட்டங்கள்

சட்டப் பேரவையில் அமைச்சர் க. இராசாராம் தந்த தகவல்கள்

சென்னை, அக். 23—

"தமிழக வீட்டு வசதித் திட்டங்களுக்காக ஆயுள் இன்சூரன்சுக் கார்ப்பரேஷனிடமிருந்து ஒன்றரைக் கோடி ரூபாய் கடன் பெறப்பட்டது என்றாலும், தமிழக வீட்டு வசதித் திட்டங்களுக்கு இது போதுமானதாக இல்லை"

என்று சட்டம் பேரவையில், கேள்வி நேரத்தின்போது வீட்டு வசதித் துறை அமைச்சர் க. இராசாராம் அவர்கள் கூறினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"கிராமப்புற வீட்டு வசதித் திட்டங்களை மேலும் விரிவுபடுத்தும் பிரச்சினை அரசின் ஆலோசனையில் இருந்துவருகிறது.

"தமிழ்நாட்டில் வீட்டு வசதித் திட்டங்களுக்காகவும் இன்னும் அதிக வீடுகளைக் கட்டித் தரவும் மத்திய அரசிடம் ஆண்டுக்கு ரூ. 10 கோடி கேட்டிருக்கிறோம்."

துணைக் கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"'ரெடிமேடு வீடுகள் கட்டித் தரும் தொழிற்சாலையை ஏற்படுத்தும் யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறது."

வெங்கடசாமி (சுதந்தரா):— "வீட்டு வாரியத்தின்மூலம் வீடுகளைக் கட்ட எத்தனை நாள் பிடிக்கிறது? ஜி. டி. நாயுடு கண்டுபிடித்த புதிய முறை மூலம் இரண்டு, மூன்று நாட்களில் வீடு கட்டி முடிக்கும் முறை கையாளப்படுகிறதா?"

அமைச்சர்:— "அது பரிசீலனையில் இருக்கிறது; இப்போது செயல்படுத்தப்படவில்லை."

கா. வேழவேந்தன் (தி.மு.க.):— "நமது அரசு பஸ் போக்குவரத்தில் 18,000 ஊழியர்கள் இருக்கிறார்கள்; குசராத் மாநிலத்தில் பஸ் போக்குவரத்து ஊழியர்களுக்குச் சொந்த வீடுகள் தவணை முறையில் கட்டிக் கொடுப்பதுபோல் இங்கும் கட்டிக் கொடுக்கப்படுமா?"

அமைச்சர்:— "அது பற்றிப் போக்குவரத்துத் துறையினர், வீட்டு வசதி வாரியத்தினிடம் அணுகினால் இயலும்."

லத்தீப் (லீக்):— "சட்டமன்ற உறுப்பினர்கள் சொந்தமாக விடுதிகள் கட்டிக்கொள்வதற்கு வட மாநிலங்களில் அனுமதிப்பதுபோல் இங்கும் செய்யப்படுமா?"

அமைச்சர்:— "இங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியை மற்ற மாநிலத்தவர்கள் பார்த்துவிட்டு, 'மிகச் சிறப்பான விடுதி' என்று கூறக் கேட்டிருக்கிறேன்."

சென்னை வரும் பிரிட்டிஷ் மருத்துவ நிபுணர்

பேராசிரியர் அன்பழகனைச் சந்திக்கிறார்

சென்னை, அக். 25—

சென்னையில் 8 நாட்கள் தங்கியிருக்கும்பொருட்டு டாக்டர் சி எஸ். நிகால் என்ற பிரிட்டிஷ் மருத்துவ நிபுணர் சென்னைக்கு வருகை தந்திருக்கிறார்.

சென்னையில் இருக்கும்போது நலத்துறை அமைச்சர் திரு. க அன்பழகனை அவர் சந்திக்கிறார்.

அதிகமான சிற்றின்பத்தால் ஏற்படும் நோய் பற்றிய நிபுணர் டாக்டர் நிகோல். இது சம்பந்தமாக எழுதப்பட்ட புகழ் பெற்ற நூலின் ஆசிரியர்களில் இவரும் ஒருவர். இந்தியா முழுதும் ஒரு மாதச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு சொற்பொழிவுகளும் விவாதங்களும் நடத்துவார்.

அவர் வேலூர் மருத்துவ மனைக்குச் செல்கிறார்; சென்னை மருத்துவக் கல்லூரியில் அவரது துறை பற்றிய சொற்பொழிவு ஒன்று நிகழ்த்துவார்.

மக்கள் நல்வாழ்வுத் துறை பேராசிரியர் க. அன்பழகன் அவர்களையும், மருத்துவக் கல்வி முன்னேற்றத்திற்கான இந்திய நிலயத்தின் தலைவரான டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்களையும் சந்திக்கிறார்.

குடிவார உரிமைகள்

பதிவேடு தயாரிக்க ஆணை

சென்னை, அக். 24—

சென்னை — செங்கற்பட்டு — தென் ஆற்காடு — வட ஆற்காடு — சேலம் — தர்மபுரி — கோயம்புத்தூர் — நீலகிரி — இராமநாதபுரம் — திருநெல்வேலி — கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு ரெவினியூ கிராமத்திற்கும், குடிவார உரிமைகள் பற்றிய பதிவேட்டைத் தயாரிக்கும்படி, மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

1959-ம் ஆண்டின் தமிழ்நாடு விவசாய நிலங்களின் குடிவார உரிமைகள் பதிவேட்டுச் சட்டத்தின்கீழ் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆலந்தூருக்குப் பாலாற்று நீர்

ரூ. 119 இலட்சம் செலவில் திட்டம்

சென்னை, அக். 23—

சென்னைக்கு அருகில் உள்ள ஆலந்தூருக்கான பாலாற்று நீர் வழங்கும் திட்டம் சம்பந்தமான பணிகள் தொடங்கிவிட்டன.

1972-ம் ஆண்டு இறுதிக்குள் இப்பணிகள் முடிவு பெற்றுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டம், ரூ. 119 இலட்சம் செலவில் அமைக்கப்படுகிறது.

முக்கிய விநியோகக் குழாய்கள் ஆலந்தூரில் அமைக்கப்பட்டுவிட்டன; ஆதம்பாக்கம்—பழவந்தாங்கல்—நங்கநல்லூர் ஆகிய இடங்களில் விநியோகக் குழாய்களை அமைக்கும் பணி விரைவில் எடுத்துக்கொள்ளப்படும்.

எல்லாப் பகுதிகளிலும் சாலைகளையும் — சாலை விளக்குகளையும் மேம்பாடு செய்யவும், நகராட்சி தீவிர நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

ஆலந்தூருக்கும்—சென்னை நகருக்கும் இடையே நிறைய அரசுப் பஸ்களை விடுவதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நகராட்சித் தொடர்பு கொண்டிருக்கிறது.

அறுவை சிகிச்சைக்காக 6 நாள் விடுமுறை

குடும்பக்கட்டுப் பாட்டை ஊக்குவிக்கும் சலுகை

புதுடில்லி, அக். 25—

கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் எல்லா மத்திய அரசு ஆண் ஊழியர்களுக்கும் 6 நாட்களுக்கு சிறப்பு 'காஷுவல் லீவ்' அளிப்பதென்று மத்திய அரசு தீர்மானித்திருக்கிறது.

கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளும் பெண் ஊழியர்களுக்கு 14 நாட்களுக்கு சிறப்பு 'காஷுவல் லீவ்' 'லூப்' பொருத்திக் கொள்வதற்கு 1 நாள் காஷுவல் லீவும் அளிக்கப்படும்.

நாட் சம்பள அடிப்படையில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கும்—சம்பள இழப்பின்றியே இந்தச் சலுகைகள் கிடைக்கும்; ஆனால் அவர்கள் ஆறுமாத காலத்திற்கு முழுநேர அடிப்படையில் பணியாற்றியிருக்க வேண்டும்; அத்துடன், அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட பிறகு குறைந்தது மூன்று மாத காலத்திற்காவது தொடர்ந்து பணியாற்ற வேண்டும்.

பதவிக் காலத்தில் இயற்கையெய்திய சட்டமன்ற உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கு உதவி

தமிழகச் சட்டமன்றத்தில் முதலமைச்சர் மசோதா

சென்னை, அக். 24—

பதவிக் காலத்தில் மரணமடையும் சட்டமன்ற — மேலவை உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கு மாதம் ரூ 100 உதவி அளிக்கும் மசோதாவை தமிழ்நாடு சட்டமன்றத்தில், முதலமைச்சர் தாக்கல் செய்தார்.

இந்த உதவிப் பணம் 1967-ம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்து இடம் பெற்று இயற்கையெய்திய சட்டமன்ற — மேலவை உறுப்பினர்களுக்குப் பின் தேதியிட்டு அளிக்கப்படும்.

1967-ம் ஆண்டில் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவிக் காலத்தில் இயற்கையெய்திய உறுப்பினர்கள் வருமாறு:—

சங்ககிரி நல்லமுத்து (தி.மு.க.) தென்காசி சிதம்பரம பிள்ளை (காங்), பெருந்துறை எஸ். பாலசுப்பிரமணியம் (ச.சோ.) சிவகாசி எஸ் இராமசாமி நாயுடு (சுதந்) முன்னாள் அமைச்சர் ஏ கோவிந்தசாமி (தி.மு.க), பெருந்துறை எஸ். சண்முகசுந்தரம் (ச.சோ.), ஏ சிதம்பரநாதன் (காங்), டி. எஸ். எஸ். ஆதிமூலம் (சுதந்), வி. எஸ் எஸ். மணி (தி.மு.க.), கே. எம். இராமசாமி (சுதந்) இரெ. இளம்வழுதி (தி.மு.க.), மேலவை உறுப்பினர்கள் என். ஆர். தியாகராசன் (காங்), எம். எத்திராசுலு (காங்), விஜயரங்கம் (காங்) ஏ. ஆர். சுந்தரராசன் (சுயே) ஆகியோராவர்.

இவர்கள் உயிருடன் இருந்தால் எவ்வளவு காலம் பதவி வகித்திருப்பார்களோ — அதாவது, 1971-ம் ஆண்டு இடைப் பொதுத் தேர்தல் காலம் வரை— இவர்களுடைய குடும்பங்களுக்கு மாதம் ரூ 100 வீதம் உதவிப் பணம் அளிக்க முதல்வர் கொண்டுவந்த மசோதா வகை செய்கிறது.

தற்போது பதவி வகிக்கும் சட்டமன்ற — மேலவை உறுப்பினர்கள் எவராவது பதவிக் காலத்தில் இயற்கையெய்தும் நிலை ஏற்பட்டால், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் இந்த உதவித் தொகை கிடைக்கும்.

மேலும் ரூ. 100 அலவன்சு கிடைக்க வழிகோலுகிறது

தற்போது, சட்டமன்ற—மேலவை உறுப்பினர்கள் மாதம் ரூ. 250 பெறுகிறார்கள்; இவர்கள் மேலும் ரூ. 100 அலவன்சாகப் பெறவும் முதல்வர் கொண்டுவரும் இம்மசோதா வகை செய்கிறது.

ஆடம்பர விழாவுக்கு ரூ. 12.45 கோடி செலவு

தெஹ்ரான், அக். 25—

ஈரானிப் பேரரசு அமைந்த 2,500-வது ஆண்டைக் கொண்டாட அண்மையில் நடத்தப்பட்ட ஆடம்பர விழாவுக்கு ரூ. 12,45,00,000 செலவிடப்பட்டதாக அந்நாட்டு அமைச்சர் தெரிவித்தார்.

பக்கிங்காம் கால்வாயில் தூர் எடுக்கும் திட்டம்

மத்திய அரசு அனுமதி

மேலவையில் அமைச்சர் சாதிக் பாட்சா தகவல்

சென்னை, அக். 23—

"தென் பக்கிங்காம் கால்வாயில் தூர் எடுப்பதற்கு ரூ. 12 இலட்சம் செலவாகும் திட்டம் ஒன்றுக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியிருக்கிறது.

"இத்திட்டத்திற்குத் தேவையான கடன் உதவியை மத்திய அரசு அளிக்கும்"

என்று சட்டமன்ற மேலவையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், பொதுப் பணித் துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா தெரிவித்தார்.

இதன் தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்விகளும் — அமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

ஈசுவரமூர்த்தி (சிண்டிகேட்):— "சென்னை வழியாக தெற்கிலும் — வடக்கிலும் ஓடுகின்ற பக்கிங்காம் கால்வாயைத் தூர் எடுக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு நிதியுதவி செய்ய ஒப்புக்கொண்டிருக்கிறதா?"

அமைச்சர்:— "பக்கிங்காம் கால்வாயின் தென் பகுதியைத் தூர் எடுப்பதற்காக ரூ. 12 இலட்சம் திட்டத்துக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது; இதைக் கடனுகப் பெற்றுத் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்."

வெங்கா (தி.மு.க.):— "இயற்கை எழில்மிக்கதும் — 'தமிழ்நாட்டின் கேரளம்' என்று சொல்லக்கூடியதுமான இந்தக் கால்வாய்ப் பகுதியில் புயல் காரணமாக மண் நிரம்பிவிட்டதால் படகுப்போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டு — அதனால் ஆயிரக்கணக்கானவர்கள் வேலையில்லாமல் தவிக்கிறார்கள்; ஆகவே, முதல் நடவடிக்கையாகச் சென்னைக்கு அருகில் உள்ள கால்வாயின் இடைக்கழிப் பகுதிகளையாவது தூர் எடுத்துப் படகுப் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யப்படுமா?"

அமைச்சர்:— "பக்கிங்காம் கால்வாயைத் தூர் எடுப்பதற்காக மாநில அரசே ரூ. 20 இலட்சத்தில் திட்டமிட்டு மத்திய அரசுக்கு அனுப்பியது; ஆனால், அவர்கள் தென் பகுதிக் கால்வாயை மட்டும் செப்பனிட ரூ 12 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள்; இது பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டதும், கால்வாய் ஆழப்படுத்தப்பட்டு போக்குவரத்தும் அதிகரிக்கும்."

பஸ்களை அரசுடைமையாக்கப் புதிய மசோதா

சட்டப்பேரவையில் அமைச்சர் ராமச்சந்திரன் கொண்டுவந்தார்

சென்னை, அக். 23—

50 பஸ் 'ரூட்'களுக்கு மேற்பட்ட பெர்மிட்டுகள் உள்ள நிறுவனங்களை அரசுடைமையாக்க வகை செய்யும் புதிய மசோதா ஒன்றைச் சட்டம் பேரவையில், போக்குவரத்து அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் தாக்கல் செய்தார்.

சட்டப்பேரவையில் முந்தைய கூட்டத் தொடரில் கொண்டுவரப்பட்ட மசோதாவைப் போன்றது தான் இது; ஆனால் அதில் ஒரு சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

முந்தைய கூட்டத் தொடரில் கொண்டுவரப்பட்ட மசோதாவை, அவையின் அனுமதியுடன் அமைச்சர் திரும்பப் பெற்றுவிட்டார்.

'ஆர்ஜிதம்' செய்யப்படும் உடைமைகளை நிர்வாகம் செய்வது சம்பந்தமாகவும் — அரசு உடைமையாக்கப்படும் நிறுவனங்களில் ஏற்கனவே பணியாற்றிவரும் ஊழியர்கள் தொடர்ந்து வேலையில் நீடிப்பது சம்பந்தமாகவும், இந்த ஊழியர்களுக்கு நிறுவன உரிமையாளர்கள் தரவேண்டிய தொகைகள் சம்பந்தமாகவும் புதிய மசோதாவில் சில மாறுதல்கள் செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

நிறுவன ஊழியர்களுக்குத் தரவேண்டிய நட்ட ஈடு சம்பந்தமாக மாறுதல் எதுவும் இருக்காது.

'ஆர்ஜிதம்' செய்யப்படும் உடைமைகளுக்கு மார்க்கெட் மதிப்புப்படி நட்ட ஈடு அளிக்கப்படும்.

'ஆர்ஜிதம்' செய்யப்படும் உடைமைகள் உடனடியாக அரசுக்குச் சொந்தமான ஒரு கார்ப்பரேஷன் அல்லது கம்பெனிக்கு மாற்றப்பட புதிய மசோதா வகை செய்கிறது.

இராசராசன் பிறந்த நாள்

தஞ்சைப் பெரிய கோவிலில் விழா

தஞ்சை, அக். 23—

"இராசராச சோழனின் பிறந்த நாளைச் சிறப்பான முறையில் கொண்டாடத் தமிழ்நாடு அரசு முடிவு செய்திருக்கிறது"

என்று அறநிலையத் துறைத் துணை ஆணையர் வி. கோதண்டபாணி தஞ்சையில் கூறினார்.

இத்திங்கள் 29, 30-ம் நாட்களில், பிறந்த நாளையொட்டித் தஞ்சைப் பெரிய கோயிலில் பிரகதீசுவர சுவாமிக்கு 'மகாபிஷேகம்' செய்யப்படும்.

30-ம் நாளன்று இராசராச சோழன் பற்றி ஒரு பட்டிமன்றம் நடக்கும்; அறநிலைய அமைச்சர் எம். கண்ணப்பன் தலைமை வகிப்பார்.

குற்றமற்ற சமுதாயம் உருவாக்குவதற்கு முயற்சிப்போம்

உணவுக் கலப்படம் பற்றி சட்டப்பேரவையில் கேள்வி — பேராசிரியர் விளக்கம்

சென்னை, அக். 23—

உணவுக் கலப்படம் பற்றிச் சட்டப் பேரவையில் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளும் — அமைச்சர் க. அன்பழகன் அவர்கள் அறிவித்த பதில்களும் வருமாறு:—

என். கிட்டப்பா:— "1969–70-ம் ஆண்டில், உணவுக் கலப்படச் சட்டத்தின்கீழ் மாயூரம் நகரில் தொடுக்கப்பட்ட வழக்குகள் எத்தனை? அவைகளில் எத்தனைப் பேருக்குத் தண்டனை கிடைத்துள்ளது?"

அமைச்சர்:— "மாயூரத்தில் 36 வழக்குகள் போடப்பட்டன; ஈடுபட்ட அத்தனை பேருக்கும் தண்டனை கிடைத்திருக்கிறது."

பெ. மலேச்சாமி:— "உணவுப் பொருள்களில் கலப்படம் செய்கின்றவர்களைக் குசராத் மாநிலத்தில் விலங்கிட்டு வீதியில் அழைத்துச் செல்வதுபோல், அப்படித் தவறு செய்கின்றவர்களை இங்கேயும் அதே முறையில் தண்டிக்க எண்ணமுண்டா?"

அமைச்சர்:— "இது வெறும் ஏற்பாடாக இருக்கக்கூடாது; சட்டமாகத்தான் செய்ய வேண்டும்; மிகப் பலரைத் தண்டிப்பதேகூட சமுதாயத்தைக் குற்றவாளிகளாக ஆக்கிவிடுவதாகும். குற்றமற்ற சமுதாயத்தை உருவாக்க அனைவரும் முயற்சிக்க வேண்டும்."

குமாரசாமி:— "உணவுக் கலப்படம் செய்வது என்பது, பாலிலும் — எண்ணெயிலும் செய்யப்படுகிறது; இதையே ஓட்டல்களில் செய்தால் என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது?"

அமைச்சர்:— "எண்ணெய், பால் போன்றவற்றைத் தனிப்பட விற்கிறார்கள்; ஆனால், ஓட்டல்களில் கலந்துதான் உணவுப் பொருளாக செய்யப்படுவதால், அவற்றைக் கண்டுபிடிக்க இயலாது."

கா. வேழவேந்தன்:— "உணவுக் கலப்படம் செய்வதில் திறமையாயுள்ளவர்களை, அரிசி மாதிரியே கல்லிலும் — மிளகு போல் கல்லிலும் செய்கிறார்களே — அப்படிச் செய்யப்படும் இயந்திரங்களைத் தடுப்பதற்கு முயற்சி செய்யப்படுமா?"

அமைச்சர்:— "ஒருமுறை இந்தக் காரியம் தீவிரப்படுத்தப்பட்டது; தேவையானல் — இது பற்றிய விவரங்கள் கிடைக்குமானல் — நடவடிக்கை எடுக்க அரசாங்கத்தால் ஆணையிட முடியும்."

நரந்தாமன்:— "பொருள்களின் பற்றாக்குறையால்தான் கலப்படம் செய்யப்படுகிறதா?"

அமைச்சர்:— "பொருள்களின் பற்றாக்குறை என்பதல்ல; அறிவும் — நாணயமும்தான் பற்றாக்குறை."

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை செயற்குழுக் கூட்டம்

தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் பேரவையின் தலைமைச் செயற்குழுக் கூட்டம் 28–10–71 காலை 10-மணியளவில் சென்னை— தேனாம்பேட்டை 'அன்பகம்'த்தில் நடைபெறும்; அதுபோது கீழ்க்காணும் பொருள்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றன:—

- 1971–72-ம் ஆண்டிற்கான சங்க இணைப்பு — பட்டியல் அங்கீகாரம்.
- தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க நடவடிக்கைகள்.
- பேரவை நிர்வாக நடவடிக்கைகள்.
- மாவட்ட மாநாட்டு ஏற்பாடுகள் — டாக்டர் கலைஞருக்குப் பாராட்டு ஏற்பாடுகள்.
- வரவு—செலவு; மற்றும் தலைவர் அனுமதியுடன் கொண்டுவரும் முக்கியம் பிரச்சினைகள்.

செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கொள்ளுமாறு பேரவைப் பொதுச்செயலாளர் காட்டூர் கோபால் கேட்டுக்கொள்கிறார்.

நெய்வேலித் தொழிலாளர்கட்கு:

"நெய்வேலித் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் நிலைமைகள்—ஆக்கபூர்வமான எதிர்கால நடைமுறைகள் குறித்து ஆய்வு நடத்துகின்ற வகையிலான கூட்டம், நெய்வேலியில் 31–10–71 பிற்பகல் 2-மணியளவில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பணிமனையில் நடைபெறும்; அதுபோது, நெய்வேலித் தொழிலாளர் முன்னேற்றச் சங்க நிர்வாகிகள்—செயற்குழு உறுப்பினர்கள்—கழக நிர்வாகிகள், கழக—சங்க முக்கிய நண்பர்கள் கருத்துக்கள் தெரிவித்திடவும், சுமூகமான முடிவினை மேற்கொள்வதற்கு உதவிகரமாகவும் இருந்திட வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்" என காட்டூர் கோபால் அறிவிக்கிறார்.

வேளாண்மைத் தொழில் கார்ப்பரேஷன்

துணை நிலையங்களை ஏற்படுத்த முடிவு

திருச்சி, அக். 23—

செங்கற்பட்டு, மதுரை, திருச்சி, தென்னாற்காடு, சேலம் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கார்ப்பரேஷன், 3 துணை நிலையங்களை ஏற்படுத்த எண்ணியுள்ளது.

இந்த மாவட்டங்களில் ஏற்கனவேயுள்ள வட்டார நிலையங்களுடன் இவை இணைக்கப்படும் போது தருவதற்காக, விவசாய இயந்திரச் சாதனங்கள் இவற்றில் வைக்கப்பட்டிருக்கும்.

வேளாண்மைத் தொழில் கார்ப்பரேஷன் தலைவர் கே. வி. சுப்பையா, நிருபர்களிடம் இவ்வாறு கூறினார்.

திருச்சி மாவட்டம் பட்டுக்கோட்டைப் பகுதியில், நைலான் வலைத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தும் வாய்ப்புப் பற்றி கார்ப்பரேஷன் பரிசீலித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

புதுக்கோட்டையில் கலப்புப் பண்ணைகள் நிறுவுவதற்குத் திட்டம்

திருச்சி, அக். 24—

திருச்சி மாவட்டத்தில் புதுக்கோட்டை வட்டத்தில் 'கலப்புப் பண்ணை'களை நிறுவுவதற்கு தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டுத் துறை திட்டமிட்டிருக்கிறது.

வேளாண்மை மறு நிதியீட்டுக் கார்ப்பரேஷனின் உதவியுடன் இந்தப் பண்ணைகள் நிறுவப்படும்.

இதற்கு ரூ. 1.44 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்படுகிறது.

சிறப்புப் பெற்ற சித்த மருத்துவ வெள்ளாடு

சட்டப் பேரவையில் உறுப்பினர்கள் யோசனை

சென்னை, அக். 23—

ஆட்டு இறைச்சி பற்றிச் சட்டப் பேரவையில் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளும் — அமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

வகாப் (லீக்):— "வெள்ளாட்டு இறைச்சி உடம்புக்கு நல்லது என்று சித்த மருத்துவ நூல்களில் கூறப்பட்டிருக்கிறது; ஆகவே, வெள்ளாடுகளைக் கண்ட இடத்தில் வளர்க்காமல் பாதுகாக்கப்பட்ட இடத்தில் மட்டுமாவது வளர்க்கப்படுமா?"

அமைச்சர் க. அன்பழகன்:— "வெள்ளாடுகளால் விவசாயிகளுக்கு இடையூறு இருக்கிறது என்று கூறுகிறார்கள்; பயிர்களை வீணாக்கிவிடுகிறது; சிறு மரத்தில்கூட ஏறி—மரத்தை முறித்துவிடுவதால் சேதமாகிவிடுகிறது; மருத்துவத் தேவை அளவுக்கு வெள்ளாட்டு இறைச்சிக்குப் பஞ்சம் இருக்காது என்று நம்புகிறேன்."

சுரேந்திரன் (சோஷலிஸ்டு):— "இப்போதெல்லாம் இறைச்சி சாப்பிடுபவர்கள் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது; வெள்ளாட்டு இறைச்சியை அதிகம் பயன்படுகிறார்கள்; அதிலிருந்து தான் ஆயுர்வேத மருந்தான 'அரசஜ இரசாயனம்' தயாரிக்கப்படுகிறது; ஆகவே, அதிக வெள்ளாடுகள் வளர்க்க ஏற்பாடு செய்யப்படுமா?"

அமைச்சர்:— "இது ஆலோசனைக்கு உரியது."

அரசு டாக்டர்கள் தனியாகத் தொழில் நடத்தத் தடை

அரசு ஆலோசனை — அமைச்சர் க. அன்பழகன் தகவல்

சென்னை, அக். 23—

"அரசு மருத்துவமனைகளில் பணியாற்றும் டாக்டர்கள் தனியாகச் சொந்த முறையில் தொழில் நடத்துவதைத் தடை செய்யும் திட்டம் குறித்து அரசு ஆலோசித்து வருகிறது"

என்று சட்டப் பேரவையில், கேள்வி நேரத்தின்போது, நல்வாழ்வுத் துறை அமைச்சர் க. அன்பழகன் அவர்கள் தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"உடனடியாக இதை நிறுத்திவிடுவது என்பது இயலாததாகும்; கிராமப் பகுதிகளில் தேவையான மருத்துவ வசதிக்கு ஏற்பாடு செய்துவிட்டு, அறவே சட்டம் மீறப்படாத சூழ்நிலை உருவான பிறகு இதைச் செய்ய வேண்டும்."

கோவை செழியன் (தி.மு.க.):— "தனிப்பட்ட டாக்டர்கள் மருத்துவம் நடத்தும் வட்டாரங்களில் அரசாங்க டாக்டர்களும், 'ஆலோசனை' என்ற பெயரால் மருத்துவமனை வைத்துக்கொண்டு அரசாங்க மருந்தையே அங்கு கொண்டுவந்து குறைந்த விலையில் மருந்து கொடுப்பதால், மற்ற டாக்டர்களுடைய தொழில் பாதிக்கப்படுகிறது; ஆகவே, 'அரசாங்க டாக்டர்கள் தனியாகத் தொழில் செய்யக் கூடாது' என்று தடை செய்யப்படுமா?"

அமைச்சர்:— "சில டாக்டர்கள் ஆலோசனை மட்டும் கூற அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்; தனிப்பட்ட டாக்டர்கள் அதிகம் வர வரத்தான் இந்தப் பிரச்சினையும் நின்றுவிடும்; சட்டப்படி டாக்டர்களை முழு அளவில் தடுக்க இயலவில்லை; அது பற்றி விரைவில் முடிவு எடுக்கப்படும்; இது ஒரு சமுதாயப் பிரச்சினையாக இருப்பதால், உரிய முறையில் பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது; உடனடியாக இதைத் தடுத்து நிறுத்த இயலாது. ஆந்திரத்தில், 'அரசு டாக்டர்கள் தனியாகத் தொழில் நடத்தக் கூடாது' என்று தடை விதித்தார்கள்; அந்தத் தடை முழுவதும் மீறப்பட்டு விட்டது; ஆகவே அந்தத் தடையைக் கைவிட்டு விட்டார்கள்."

பட்டுக்கோட்டை விதைப் பண்ணை

ஆராய்ச்சி நிலையமாக மாற்றியமைக்கப்படும்

திருச்சி, அக். 23—

பட்டுக்கோட்டையிலுள்ள அரசாங்க விதைப் பண்ணை — ரூ. 1 இலட்சம் செலவில் — பல போகச் சாகுபடி ஆராய்ச்சி நிலையமாக மாற்றியமைக்கப்படும்.

தற்போது 38.90 ஏக்கர் நிலம் இருக்கிறது.

இது மட்டுமன்றி, பேராவூரணிப் பகுதியில், 5 ஏக்கர் உவர் — களர் நிலங்கள், ஆராய்ச்சிக்காகக் குத்தகைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

தேசத்தை முன்னேற்றப்பாதையில் இயக்கிச் செல்லும் சக்கரங்கள்

சக்கரங்கள் பல தொழில்களை இயக்குகின்றன. உதாரணமாக, ரயில்கள் கிராமங்களையும் நகரங்களையும் இணைக்கின்றன; விற்பனைச்சரக்குகளை மார்க்கெட்டுகளுடன் இணைக்கின்றன; நாட்டின் ஒவ்வொரு பகுதியையும் மற்றப் பகுதிகளுடன் இணைக்கின்றன. டாடாவின் தண்டவாளங்கள், எ.குச்சக்கரங்கள் மற்றும் ஆக்ஸில்கள் மக்களையும், பொருள்களையும் இப்பரந்த நாட்டின் பல்வேறு இடங்களுக்கும் கடத்திச் செல்லுகின்றன நாட்டின் முன்னேற்றத்திற்கான இணைப்பக் கூறையில் எ.கு ஈடற்ற முக்கியத்துவம் வகிக்கிறது உறுதியான உழைப்பு, உபயோகம் மற்றும் பணமுதலீட்டின் முழு மதிப்பையும் கிடைக்க வழி செய்வதில் அது ஈடு இணையற்றது அக்காரணத்தினால்தான் நாங்கள் ஏராளமான நேரம் உழைப்பு மற்றும் பணம் இவற்றை டாடாவின் முததிரையுள்ள பொருள்களை மேலும் மேலும் சீராக்குவதில் செலவிடுகிறோம். இந்தியப் பொருளாதாரத்தை சீராகக ஊககமளிபபது டாடா ஸ்டீல்.

டாடா ஸ்டீல்



அகில இந்திய ரீதியில் மதுவிலக்கு வேண்டும் என்பதே நமது கொள்கை

இதற்கு முதல் கட்ட வெற்றி கிட்டிவிட்டது

பொதுநலனுக்குப் பாதகமான இடங்களில் மதுக் கடைகளை அகற்ற நடவடிக்கை

சட்டப் பேரவையில் முதலமைச்சர் கலைஞர் விளக்கம்

சென்னை, அக். 23—

"மதுக் கடைகள் வைக்கப்படும் இடம் பற்றிய பிரச்சினையை அரசியல் பிரச்சினையாகக் கருதாமல், மனிதாபிமானப் பிரச்சினையாகக் கருதவேண்டும்.

"தேவாலயங்கள் -- சர்ச்சுகள் -- மசூதிகள் ஆகியவைகளுக்கு அருகில் மதுக்கடைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று ஏற்கனவே மாவட்டக் கலெக்டர்களுக்குக் கூறப்பட்டிருக்கிறது; ஆங்காங்கே கலெக்டர்களும் நடவடிக்கைகள் எடுத்துவருகிறார்கள்.

"ஏற்கனவே அமைந்துவிட்ட கடைகளை அகற்ற ஒரு மாத நோட்டீசு கொடுக்கவேண்டியிருக்கிறது; சில இடங்களில் உடனடியாக நடவடிக்கை எடுக்கமுடியாமல் சில சங்கடங்கள் இருக்கின்றன; அதுபற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

"பொதுநலனுக்குக் குந்தகம் ஏற்படும் இடங்களில் அமைந்துள்ள கடைகளை அகற்றுவதற்கு அரசின் சார்பில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்"

என்று சட்டப்பேரவையில், தமிழ்நாடு மதுவிலக்கு (செயல் திறனை நிறுத்திவைக்கும்) மசோதாமீது நடைபெற்ற விவாதத்தின்போது குறுக்கிட்டு பேசுகையில் முதலமைச்சர் கலைஞர் தெளிவுறச் சுட்டிக் காட்டித் தெரிவித்தார்; இத்தொடர்பில் மேலும் அவர் கூறியதாவது:—

"மதுவிலக்குக் கொள்கை அனைவராலும் ஏற்கப்பட்ட கொள்கை; நமது வேண்டுகோள் எல்லாம், 'அகில இந்திய ரீதியில் மதுவிலக்கு வரவேண்டும்' என்பதுதான்; தலைமையமைச்சர், அண்மையில், 'அது பற்றிச் சிந்திக்க வேண்டும்' என்று கூறியிருக்கிறார்; ஆகவே, முதற்கட்ட வெற்றியை நாம் அடைந்துள்ளோம்; முழு வெற்றி பெறும் நன்னாளை நாம் எதிர்பார்த்திருப்போமாக!

இதுவரையில், சட்டமன்ற உறுப்பினர்கள்—பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து வந்த முறையீடுகளைத் தொடர்ந்து 62 இடங்களில் மதுக்கடைகள் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன; ஆகவே, நியாயமான புகார்கள் உடனடியாகக் கவனிக்கப்படத்தான் செய்கின்றன.

'சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இதுபற்றி கலெக்டர்கள் பதில் எழுதுவதில்லை' என்று குறை கூறப்பட்டது; இனி கலெக்டர்கள் அலுவலகங்களிலிருந்து பதில் கிடைக்க உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஆனால், சில சமயங்களில் வேண்டுமென்றே தவறான பிரச்சாரம் செய்யப்படுகிறது; மதுரையில், காந்தி உடை மாற்றிய வீட்டிலேயே மதுக்கடைவைத்துவிட்டார்கள் -- என்று பிரச்சாரம் செய்யப்பட்டது.

உண்மையில் அந்தவீதியில் மதுக்கடை இருந்தாலும், குறிப்பிடப்பட்ட இல்லத்தில் மதுக்கடை இல்லை; அந்த இல்லம் 18-6-71 அன்று கதர் வாரியத்துக்காக வாங்கப்பட்டிருக்கிறது.

இருப்பினும், 'காந்தியார் தங்கிய இடத்தில் கள்ளுக்கடை' என்ற பிரச்சாரம் துவக்கப்படுகிறது; இதுபோன்ற பிரச்சாரங்கள் முறியடிக்கப்பட வேண்டும்."

அமைச்சர் செ.மாதவன்

மசோதாமீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் சட்ட அமைச்சர் செ. மாதவன் அவர்கள் கூறியதாவது:—

"மதுவிலக்குத் திட்டம் தள்ளிவைக்கப்பட்டதையடுத்து, சட்டம் -- ஒழுங்கு ஆகியவற்றைக் கண்காணித்து கடும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று போலீசாருக்குக் கூறப்பட்டிருக்கிறது.

"மதுவிலக்குக் கொள்கை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்; இந்தியா முழுவதற்கும் மதுவிலக்குச் சட்டம் வருமானால் நம் மாநிலமும் அதை முன்னின்று நிறைவேற்றும்.

பள்ளிகள் -- கோவில்களுக்கு அருகில் உள்ள மதுக்கடைகளை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது."

மசோதாமீது நடைபெற்ற வாக்கெடுப்பில், ஆதரவாக 121 வாக்குகளும், எதிராக 19 வாக்குகளும் பதிவாயின.

தமிழ்நாட்டுச் சிலைகள்

வெளிநாட்டினர் விரும்பி வாங்குவதற்குக் காரணம்?

சட்டப் பேரவையில் அமைச்சர் செ. மாதவன விளக்கம்

சென்னை, அக். 23—

மலைச்சாமி (தி.மு.க.):— "தமிழ்நாட்டிலிருந்து சிலைகளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கிறார்களே--வெளிநாட்டில் அவற்றை வாங்குகின்றவர்கள், அந்தச் சிலைகளை விரும்புகிறார்களா அல்லது சிலைகளில் உள்ள கலையை விரும்புகிறார்களா? அவர்கள் கலையை விரும்பினால் தமிழ் நாட்டில் அதே போன்று அழகான சிலைகளைப் பெரும் அளவில் செய்து வெளிநாடுகட்கு ஏற்றுமதி செய்யலாம் அல்லவா?"

அமைச்சர் செ. மாதவன்:— "வெளிநாட்டில் சிலையை விரும்பி வாங்குகின்றவர்கள், சிலையில் உள்ள கலையை விரும்பித்தான் வாங்குகிறார்கள்; பழங்கால அழகுச் சிலைகளைத்தான் விரும்பி வாங்குகிறார்கள்; நம் நாட்டில் உள்ள முப்பத்து முக்கோடி கடவுளர்களை அவர்கள் விரும்பமாட்டார்கள்."

சிலைப் பயிற்சியாளர்கட்கு அரசு தரும் உதவி

அனந்தநாயகி (சிண்டிகேட்):— "நாதசுரம் பயிற்சியாளர்கட்கு அரசு உதவி செய்வதுபோல் சிலைப் பயிற்சியாளர்களுக்கும் அரசு உதவி செய்யுமா?"

அமைச்சர்:— "ஆண்டுக்குப் 10 பேருக்குத் தலா ரூ. 60 வீதம் சிலைப் பயிற்சியாளர்கட்கு உதவி செய்யப்படுகிறது."

பருப்பு வகைகள் சாகுபடித் திட்டம்

23 இலட்சம் ஏக்கரில் செயல்படுத்தப்படும்

சென்னை, அக். 23—

"தமிழ்நாட்டில் 23 இலட்சம் ஏக்கர் நிலத்தில் துவரை -- உளுந்துப் பயறு போன்ற பருப்பு வகைகளைச் சாகுபடி செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது; புதிய ஆராய்ச்சியின் மூலம் அதிக விளைச்சல் தரக்கூடிய பயறுரக விதை கண்டுபிடிக்கப்பட்டு வெளி மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது"

என்று சட்டப் பேரவையில், திருமதி அனந்தநாயகி (காங்) கேள்விக்குப் பதிலளிக்கையில், அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் கூறினார்.

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி

அமைச்சர்கள் -- சட்டமன்ற உறுப்பினர்கள் காணிக்கை

சென்னை, அக். 24—

முதலமைச்சர் திரட்டும் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதிக்கு அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் நன்கொடை வழங்கியுள்ளனர்.

முதல்வர் உட்பட ஏழு அமைச்சர்களும், பேரவைத் தலைவர் கே. ஏ. மதியழகனும், இந்த நிதிக்குத் தலைக்கு ரூ. 1,000 வீதம் நன்கொடை அளிததுள்ளனர்.

மற்ற அமைச்சர்களும், துணைப் பேரவைத் தலைவர் பெ. சீனிவாசனும் தலா ரூ. 500 வீதம் வழங்கியிருக்கின்றனர்.

இது தவிர, சட்டமன்ற உறுப்பினர்கள் 192 பேர் தங்களுடைய ஒரு மாத சம்பளத்தை பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

முதுமலையிலுள்ள விலங்குகள் சரணாலயம்

சென்னை, அக். 25—

முதுமலையில் உள்ள விலங்குகள் சரணாலயத்துக்கு வருகை தரும் உல்லாசப் பயணிகள், அந்த சரணாலயத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு வசதியாக அங்கு, 'குட்டி பஸ்' ஒன்று விடப்படுகிறது; மத்திய சுற்றுலாத்துறை, இந்தப் பஸ்சை நன்கொடையாக அளித்துள்ளது.

அந்தப் பஸ்சில் 10 பேர் உட்காரலாம். மைக்ராபோன், சிறப்பு மிகக ஒளி விளக்குகள், ஐஸ் பெட்டி முதலிய வசதிகள் அதில் உள்ளன.

இந்தப் பஸ்சை, தமிழ்நாடு அரசின் சார்பில் முதலமைச்சர் பெற்றுக்கொண்டார்.

பயணிகள் வசதிக்கு ரூ. 80 இலட்சத்தில் திட்டம்

"முதுமலை சரணாலயத்திற்குவரும் உல்லாசப் பயணிகளுக்கு மேற்கொண்டு வசதி செய்துதர ரூ. 80 இலட்சததிற்கான திட்டம் ஒன்றை, மத்திய அரசுக்குத் தமிழ்நாடு அரசு அனுப்பியிருக்கிறது"

என்று தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சா க. இராசாராம் அவர்கள், நிருபர்களிடம் கூறினார்.

சென்னை நகரில் கடுமழையின் விளைவு

பல்லாயிரக்கணக்கான குடிசைவாசிகள் தவிப்பு

பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் -- உடனடி உதவிகள் அளிப்பதில் மேயர் -- மற்றும் கழகத் தோழர்கள்

சென்னை, அக். 25--

கடந்த 4 நாட்களாகச் சென்னை நகரிலும் -- தமிழகத்தின் பல பகுதிகளிலும் கடும் மழை பெய்து வருகிறது.

மழை காரணமாகச் சென்னை நகரில் சுமார் 25,000 பேர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்; இவர்களுக்கு உடனடியாக உதவிகளைச் செய்தும், உணவு – உறையுள் அளித்தும் மேயர் சா. கணேசன் அவர்களும் -- மாநகராட்சி அதிகாரிகளும் செயல்பட்டுவருகின்றனர்.

வங்கக் கடலில் உருவாகியிருக்கும் புயல் இன்னும் கரையைக் கடக்கவில்லை என்றும், எனவே, தமிழகம் முழுவதிலும் பெரும் மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை நிலையம் எச்சரித்திருக்கிறது.

சென்னை நகரில் விட்டு விட்டு கன மழை பெய்யக்கூடும்.

மழை காரணமாகச் சென்னைக்கு வரவேண்டிய பல இரயில்களும் தாமதித்தே வருகின்றன.

ஓரளவுக்கு விமானப் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

மழை காரணமாகச் சென்னையில்யில் இரு மரணங்கள் ஏற்பட்டிருக்கின்றன; இதில் 7 வயது சிறுமி, வீடு ஒன்று இடிந்து விழுந்ததனால் இறந்துவிட்டாள்; மற்றோர் இளைஞர் மின்சாரம் தாக்கி இறந்துவிட்டார்.

கடந்த இரு நாட்களில் மட்டும் சென்னை நகரில் சுமார் 15 அங்குல மழை செய்திருக்கிறது.

செங்குன்றம், பூண்டி ஆகிய ஏரிப் பகுதிகளிலும் மழை பெய்திருப்பதால், இந்த ஏரிகளில் நீர் அளவு உயாந்துகொண்டுவருகிறது.

சைதை மர்மலாங் பாலத்துக்கு அருகில் அமைந்துள்ள ஆட்டுச்சேரி குடிசைப் பகுதிகளை வெள்ளக் கொடுமைகளிலிருந்து பாதுகாக்க ரூ. 5.50 இலட்சம் செலவில் தடுப்புச் சுவர் ஒன்று எழுப்பப்போவதாக மேயர் கணேசன் தெரிவித்தார்.

மேயருடன், மத்தியக் குழுத் தலைவர் ஆர். டி. பாஸ்கரன், கமிஷனர் சச்சிதானந்த ராவ், மற்றும அதிகாரிகள் வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட்டு மக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துவருகின்றனா.

பல பகுதிகளிலும் மக்களுக்குஉதவி செய்வதில் கழகத் தோழர்கள் முன்னின்று செயல்பட்டுவருகின்றனர்.

தேங்கி நிற்கும் தண்ணீரை வெளியேற்ற மாநகராட்சி ஊழியர்கள் அரும் பாடுபட்டுவருகின்றனர்.

குடிசைவாழ்ப் பகுதி மக்கள் பொதுவாகப் பாதிக்கப்பட்டிருப்பினும், புளியந்தோப்பு வ. உ. சி. நகர், ஓட்டேரி, கொருக்குப்பேட்டை, மேற்கு மாம்பலம், அஞ்சல் ஊழியர் குடியிருப்பு, ஆகிய இடங்களே கடுமையாகப் பாதிக்கபபட்டிருக்கின்றன.

அண்ணா நகரில் அமைந்துள்ள குடிசைகள் பெரும்பாலும் வெள்ளத்தில் மூழ்கியிருககின்றன; இப்பகுதி மககள் வீட்டு வசதி வாரியத்தில் கட்டப்பட்டிருக்கும் புதிய குடியிருப்புக்களில் தற்காலிகமாகத் தங்கியுள்ளனர்.

சென்னையில் ஏற்பட்டிருக்கும் கடுமழை காரணமாக, குடிசை மாற்று வாரியத் தலைவர் இராம. அரங்கண்ணல் அவர்கள், தமது வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தைத் தள்ளிவைத்திருககிறா; சிங்கப்பூரில் குடிசை ஒழிபபுப் பகுதிகளைக் கண்டறியும் பொருட்டு இவரும் -- அதிகாரிகளும் செல்வதாக இருந்தனர்.

பாதிக்கப்பட்டிருக்கும் குடிசைவாழ் மக்களின் நலன்களைக் கவனிக்கும் பொருட்டு சுற்றுப்பயணத்தை அரங்கண்ணல் தள்ளிவைத்திருக்கிறார்.

தரம் குறைந்த பானங்கள் விற்பனை

தடை செய்ய நடவடிக்கை

சட்டப் பேரவையில் அமைச்சர் க. அன்பழகன் பதில்கள்

சென்னை, அக். 24—

"சென்னை நகரில் சாலை ஓரங்களில், சோடா -- கலர் போன்ற பானங்களைத் தரம் குறைந்த முறையில் விற்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?"

என்று சட்டப் பேரவையில், ஈசுவரமூர்த்தி (சிண்டிகேட்), கேள்வி நேரத்தின்போது வினவினார்.

அமைச்சர் க. அன்பழகன்:— "ஆம்; அடிக்கடி திடீர் சோதனை நடத்தி, தரக்குறைவானதும் -- சுகாதாரக் கேடு உண்டாக்கக்கூடியதுமான சோடா -- கலர் போன்ற பானங்கள், சென்னை மாநகராட்சியால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்படுகின்றன."

சாமிநாதன் (சுதந்.):— "இந்த மாதிரி தரக்குறைவான பானங்களுடன், கோகோ கோலா, பாண்டா போன்ற பானங்களின் போலியையும் விற்கிறார்கள்; அவை தடை செய்யப்படுமா?"

அமைச்சர்:—"இதுபற்றி இலாகா மூலம் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படும்."

டாக்டர் சந்தோசம் (ஐக்கியக் கட்சி):—"சிறு கடைக்காரர்கள், ஆபத்தான முறையில் கலப்பட இனிப்புப் பண்டங்களைப் பள்ளிக்கூடங்களுக்கு முன்னால் பிள்ளைகளுக்கு விற்கிறார்கள்; அது தடுக்கப்படுமா?"

அமைச்சர்:— "இப்படிப்பட்ட கலப்படப் பண்டங்களைத் தடை செய்வதற்கு நகராட்சிகளுக்கு வழிமுறைகள் இருக்கின்றன; ஆகவே, நகராட்சிதான் அது பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்; ஆனால், கிராமப் புறப் பகுதிகளில் இவ்வாறு நடவடிக்கை எடுக்க இயலாது."

கிருஷ்ணசாமி (சிண்டிகேட்):— "சோடா கடைகளில், 'பழ ரசம்' என்ற பெயரால் மதுபான பொருட்கள் விற்கிறார்கள் -- அது தடுக்கப்படுமா?"

அமைச்சர்:—" 'பழ ரசம்' என்ற பெயரால் மது விற்பது தடுக்கப்பட வேண்டியதாகும்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.